அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 27/96

எனது இல. 11/2/3/9(எச்) பொது 51
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7.
1996.08.30 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

அரச உத்தியோகத்தர்களின் சேவைக்காலத்தை
60 வயது வரை நீடித்தல்.

---

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் V இன் பிரிவு 5.3 இன் இறுதியில் இதன் கீழ் காட்டப்பட்டுள்ள புதிய பிரிவு உட்புகுத்தப்படுகிறது.

"எனினும் அமைச்சின் செயலாளர் ஏதேனும் ஒரு சேவை நீடிப்புக்கான வேண்டுகோளை நிராகரிப்பதாயின் சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கலந்தாலோசித்து அவரின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரச பணியாளர்களின் சேவை நீடிப்புகளை நிராகரிக்கும் போது அதற்காக ஐயமின்றி நிரூபிக்கக் கூடிய காரணங்கள் இருக்க வேண்டும். பல அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் விடய எல்லைக்குட்பட்ட சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆகுமிடத்து, அவர்களின் சேவை நீடிப்பை சம்பந்தப்பட்ட அமைச்சர் எக்காரணம் கொண்டும் நிராகரிப்பாராயின் உத்தியோகத்தரின் சேவை நீடிப்பு பற்றி அரசாங்க நிருவாக அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு மேன்முறையீடொன்றை சமர்ப்பிப்பதற்காக சந்தர்ப்பம் வழங்க வேண்டும்."

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற